**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.03/2022
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : ராணியம்மாள் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of June 2023.

09.06.2023

(எதிரிகள் 2 முதல் 5 ஆஜர், எதிரி 1 ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். இவ்வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 14.08.2021ம் தேதி மதியம் சுமார் 02.15 மணியளவில் அசா.1 அவரது வீட்டில் இருந்தபோது 1 முதல் 4 எதிரிகள் அங்கு வந்து அசா.1யை ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசா.1யை 1 மற்றும் 2ம் எதிரிகள் கீழே தள்ளி காலால் மிதித்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது.  3 மற்றும் 4 ம் எதிரிகள் அசா.1 ன் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் அடித்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.  சத்தம்கேட்டு அங்கு சென்ற நான், ராஜேஸ்வரி, காளீஸ்வரி ஆகியோர் எதிரிகளை விலக்கிவிட்டபோது எதிரிகள் அசா.1 யை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல.

2) சம்பவத்தை கண்ணால் பார்த்தாக முதுகுளத்தூர் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.03/2022
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : கோபிநாத் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09[th] day of June 2023.

09.06.2023

(எதிரிகள் 2 முதல் 5 ஆஜர், எதிரி 1 ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மதுரை காமராஜர் பல்கலைக்கலைக்கழகத்தில் B.A., படித்து வருகிறேன். கடந்த 14.08.2021ம் தேதி மாலை 05.30 மணியளவில் நானும், கலைமணி என்பவரும் அசா.1ன் வீட்டின் அருகே பேசிக்கொண்டிருந்தபோது முதுகுளத்தூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சண்டை தொடர்பாக கேட்டு சாட்சியாக இருக்க சம்மதமாக என்று கேட்டார்கள் அதற்கு சரி என்று கூறி நான் மட்டும் கையொப்பம் செய்தேன்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 14.08.2021ம் தேதி மாலை 05.30 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தார்கள். அசா.1 எனக்கு என்ன உறவுமுறை என்றால் அம்மாச்சி ஆவார். அசா.1 எனது

அம்மாவிற்கு இடம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அம்மா அசா.2 சொல்லிக்கொடுத்தற்கு இணங்க நான் நீதிமன்றத்திற்கு வந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான்.

2) காவல்நிலையத்தில் வைத்துதான் நான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் இல்லை, சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். அசா.1 மற்றும் அசா.2 கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.